# ஆத்ம ஜோதி



# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும்
இறைவன் ஒருவன்
எல்லா உடலும்
இறைவன் ஆலயமே.

...சுத்தானந்தர்...

சோதி 10 சுடர் 10. விளம்பி ௵ ஆவணி 14-8-58.


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விநாயகர் வணக்கம் | ... | 289 |
| கணபதி கீர்த்தனம் | ... | 290 |
| விநாயகர் | ... | 291 |
| கணபதி பூஜை | ... | 295 |
| விநாயகர் அகவல் | ... | 297 |
| ஆத்மபோதம் | ... | 299 |
| யோகஆசனங்கள் | ... | 301 |
| எக்காலம் | ... | 304 |
| பிள்ளையார் சதுர்த்தி | ... | 305 |
| ,, சிந்தனை | ... | 309 |
| அறிவுரை... | ... | 311 |
| மும்மதம் | ... | 313 |
| சுவாமி ஸ்ரீ சிவானந்தா | ... | 316 |
| உருத்திரபுர ஈசுவரர் பதிகம் | ... | 318 |
| சான்றோர் | ... | 320 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75-00 வருடசந்தா ரூ. 3-00
தனிப்பிரதி சதம் 30.
கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.

ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி (சிலோன்)


## விநாயகர் வணக்கம்

1. வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

...ஔவையார்...

2. நற்குஞ்ச—ரக்கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ்ச ரக்கன்று காண்.

...உமாபதிசிவம்...

3. நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

...அருணகிரிநாதர்...

4. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

...திருமூலர்...

5. சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

திருவிளையாடற்புராணம்..

6. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

...கந்தபுராணம்...

7. ஏரானைக் காவிலுறை யென்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால்-வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவருஞ் சித்திவருந் தான்.

...தனிப்பாடல்...

# கணபதி கீர்த்தனம்.

(மகரிஷி சுத்தானந்தர்)

இராகம் கல்யாணி] [ரூபகதாளம்

**பல்லவி**

ஓங்கார விநாயக விக்கினராஜ சரணம் (ஓம்)

**அனுபல்லவி.**

ஆங்கார மற்ற நேயர்,
அன்புள் வளரும் இன்பப் பொருளே (ஓம்)

**சரணம்**

வஞ்சமற்று, நஞ்சமற்று,
வறுமை மடமை யடிமை யற்று
அஞ்சலற்ற வாழ்வை யருளாய்
அமர ஜோதி யான தேவா (ஓம்)
உண்மையான சுத்த சங்கம்
உலகமெல்லாம் பரவிப் பொலியத்
திண்மையான திவ்ய யோக
சித்தி யருளாய் சக்தி யமுதே (ஓம்)
நவயுக ஜீவன விதாத
நாத விந்து கலாதீத
சிவகுமார பாஹி பாஹி
ஜெய கணேச ஜெய கணேச (ஓம்)

ஹம்ஸவத்னி] [ஆதிதாளம்

**பல்லவி**

கருணை செய்வாய் — கஜவதன
கான ரசம் பொங்கும் ஞானவரந் தந்தே (கருணை)

**அனுபல்லவி**

அருளோங்கும் சுத்த சக்தி சிவகாமி
அம்பிகை சுதனே நம்பினேன் உனையே (கருணை)

**சரணம்**

தீங்கனி பாகு தேன்சே ரமுதம்
திருமுன் படைத்துச் சரணம் புகுந்தேன்
ஓங்கார விநாயக விக்னராஜா
உயர்வான வெற்றி யருளும் கணேசா (கருணை)



# விநாயகர்

(ஆசிரியர்)

வி – மலோன்; நாயகர்–தலைவர். அதாவது தனக்கு மேலொரு தலைவர் இல்லாதவர் என்பது பொருள். உமாதேவியாரது திருமணத்தில் சிவபிரானார் கணபதியை வழிபட்டார் என்று வரலாறு இருத்தலின் கணபதி வழிபாடு மிகத் தொன்மை வாய்ந்தது என்பது பெறப்படுகின்றது. முருகன் வள்ளி திருமணத்திலும் கணபதியே முக்கிய இடம் பெறுகின்றார்.

கணபதி வழிபாடு மிக எளிமையானது. சிறிது சாணி உருண்டையும் அறுகம் புல்லும் கிடைத்து விட்டால் விநாயகரை வீட்டுக்கு எழுந்தருளச் செய்துவிடலாம். விநாயக வழிபாடாற்றுத சடங்குகள் எவையுமே இல்லை என்று கூறிவிடலாம். தம்மை நினைப்போருக்கு விக்கினங்களைப் போக்கி நினையாதாருக்கு விக்கினங்களை உண்டாச்சித் தம்மை நினைக்கச் செய்பவரான படியால் அவருக்கு *விக்கினேஸ்வரர்* என்றும் பெயருண்டு. வீடுதோறும், வீதிகள்தோறும் விநாயகருக்கு ஆலயமுண்டு; பூஜை உண்டு.

*இந்தியாவில்* தோன்றியுள்ள மதங்கள் அனைத்துக்கும் பொதுவாய் எழுந்தருளியிருக்கும் தெய்வம் விநாயகர். விஷ்வக்ஸேநர் எனும் சேனைநாயகர்என்கிறது வைஷ்ணவம் புத்தநாயகர் என்று போற்றுகின்றது பௌத்தமதம். அருகநாயகர் என்று பேரிட்டு ஆராதிக்கின்றது ஜைனமதம். இங்ஙனம் **இமயம்** முதல் **கன்யாகுமரி** வரை சர்வசமய சமரச மூர்த்தியான வித்தக விநாயகர் **சைனு, திபெத்** முதலிய எத்தேசத்தினும் கோபில்கொண்டு இருக்கின்றார்.

மக்கள் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் விநாயக வழிபாடு இடம்பெறுகின்றது. எதனை எழுதத் தொடங்கும் போதும் பிள்ளையார் சுழிஇட்டே ஆரம்பிப்பது வழக்கம். புதிதாகக் கட்டப்பெற்றுள்ள வீடு ஒன்றின் கிருஹப்பிரவேச வேலையில் ஒரு நொடிப் பொழுதில் அது கணபதி கோயில் ஆய்விடுகிறது. பிறகு மக்கள் குடிபிருப்பு வீடு ஆகிறது.

அவனுடைய வழிபாட்டுக்கு விதியொன்றும் கிடையாது. விளையாட்டுப் பிள்ளைகள் தம் போக்கில் **பிள்ளையாரைப்** பேணலாம். அடுத்த நிமிடத்தில் அதே மூர்த்திக்கு வேத விதிப்படி கிரியாவிசேடங்களுடன் ஆராதனைகள் நிகழும். ஆடவர், மகளிர், கற்றவர், மற்றவர், முதியோர், இளைஞர் ஆகிய அனைவரும் அவரவர்க்கு உகந்தமுறையில் விநாயகக் கடவுளை வேண்டியவாறு வழுத்தலாம்.

இந்துக்களிற் சிலர் கணபதியையே பரம் பொருளாக வழிபட்டுவருகின்றார்கள். இந்தவழிபாட்டிற்குக் காணபதம் என்று பெயர். இந்தவழிபாட்டை நடத்துபவர்கள் காணபதர். இவர்கள் கணபதி மூலாதார சக்தி உருவினர் என்றும், பிரணவம் என்ற ஓங்கார வடிவினர் என்றும், அவருடைய துதிக்கை அந்த ஓங்காரத்தையே குறிக்கும் என்றும் கூறுவார்கள். காணபதர் கணபதியின் பெயர்க்கும் அவருடைய உறுப்புகளுக்கும் தத்துவப் பொருள்கள் கூறுவார்கள். கணபதி என்னும் பதத்திலுள்ள '**க**' என்பது மனோவாக்குகள்; '***ண***' என்பது அவற்றைக் கடந்த நிலை, அவ்விரண்டுக்கும் ஈசன் கணேசன். சிலர் '**க**' என்பது அறிவு; '***ண***' என்பது வீடு என்று கொண்டு கணேசன் அறிவுக்கும் வீட்டுக்கும் உரிய தெய்வம் என்று கூறுவார்கள்.

ஆலமரம் வித்தில் அடங்கும்: அதுபோல் பிரணவத்தில் எம்மந்திரமும் அடங்கும். அந்த ஓம் எனும் பிரணவமே வித்தக விநாயகரின் விமலசொரூபம். ஒடித்த கொம்பின் இடத்திலிருந்து, பிரணவச்சுழி ஆரம்பிப்பதை அவரும் அறிவார்.

விநாயகன் ஆனைமுகத்தனாக உரு எடுத்திருக்கிறான். உடலின் மற்றப் பகுதிகள் மானுடனுக்கு இப்பது போன்று அமைந்திருக்கின்றன. தலை ஒன்று மட்டும் வேழத்தினுடையது. யானைத்தலை கணபதிக்கு உண்டாயிருப்பதைப் பற்றிய வரலாறுகள் பல இருக்கின்றன. அவை முக்கியமானவைகள் அல்ல. இவ்வடிவத்தின் வாயிலாகப் புகட்டப்படும்



தத்துவமே மிகமுக்கியமானது. தத்துவத்தை உருவகப்படுத்தியதில் அமைந்தது அவனது வடிவம். ஓம் என்னும் எழுத்து பலமொழிகளில் பல பாங்கில் எழுதப்பட்டிருக்கிறது. அத்தனை எழுத்துக்களுக்கும் பொது இயல்பு ஒன்று உண்டு. யானையின், காது, தலை, துதிக்கை ஆகிய மூன்றும் சேர்ந்து ஓம் என்பதன் பொது இயல்பு ஆகிறது. யானை முகத்தையுடைய கணபதி ஓம்கார மூர்த்தியாகத் திகழ்கிறான். அவனுடைய தலையும் துதிக்கையும் அத்தத்துவத்தை விளக்குகின்றன.

தத்துவத்தை எடுத்து ஆராய்ந்தால் பிரபஞ்சம் முழுவதும் கணபதியின் உடல் ஆகிறது. ஞானமே வடிவெடுத்தவன் கணபதி. இயற்கை என்னும் உடலில் ஒழுங்குப்பாடும் நல்லறிவும் திகழ்வதே இதற்குச் சான்றாகும்.

கையில்மோதகத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் கணபதி. போதகத்தினுடைய உள்பாசத்திலுள்ள வஸ்துவிற்கு பூரணம் என்று பெயர். இதைத்தான் நாம் விரும்பி எடுத்துப் புசிக்கின்றோம். மேல்பாகம் ருசியில்லாததால் அதைத் தள்ளி விடுகிறோம். அதுபோலவே பிராணிகளுடைய சரீரமானது ரசமற்ற வஸ்துவானதினால் அதைத் தள்ளிவிட்டு, அதற்குள் பரிபூரணமாக விளங்கிவரும் ஆத்மசைதன்யத்தை அனுபவிக்கவேண்டும். ஆத்மஸ்வரூபத்தை அனுபவித்து வரும் ஜனங்களுக்கு கணபதி மோட்சத்தை அருளுவார்.

கணபதியினுடைய திருநாமங்களைச் சங்கீர்த்தனம் செய்வதும், கணபதியினுடைய கல்யாண குணங்களைச் சொல்வதும், காணபத்ய மதத்தை அறிந்து கொள்வதும், கணபதி புராணத்தை படித்து மற்றையோருக்கு உபந்நியாசித்தலும், கணபதி மந்திர ஜபமும், சகல சதுர்த்தி விரத அனுஷ்டானமும் கணபதி மேற்செலுத்தும் பக்தியாகும்.

இவருடைய பூசைக்கு எடுத்த நன்னாள் **ஆவணி வளர்பிறைச் சதுர்த்தி** ஆகிய **விநாயக சதுர்த்தி யாகும்.**

விநாயகரைப் பூஜித்து நற்கதி அடைந்தோர் சரித்திரம் அநேகம் உண்டு. வேதவியாசருக்கு **மகாபாரதத்தை** எழுதிக்கொடுத்தவர் விநாயகரே. நம்பியாண்டார் நம்பிக்கு கலைக் ஞானங்களையெல்லாம் உணர்த்தியவரும் அவரே. **'கஜமுகாசுரனை'**க் கொன்று தேவர்களைக் காப்பாற்றினார். **'ஔவையாரை'த்** திருக்கைலாயத்திற்கு எல்லோரிலும் முன்னதாகச் சென்று சேரச்செய்தார்.

யார் எதனை விரும்பி வழிபாடாற்றினாலும் அவர்களுக்குக் **கணேசர்** அருள் கிடைக்கும் என்பது இதனால் பெறக் கிடக்கின்றது.

**பயனற்ற சொல்லைக்கேட்டுச் சந்தோஷிப்பவன் மனிதனில் பதர் போலாகிறான்.**

**வீண்காலப் போக்கு வார்த்தைகளையும் அதிக மாகப் பேசுவதையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.**





# கணபதி பூஜை

—(சுத்தானந்தர்)—

**நாம்** கடிதம் எழுதும் போது முதலில் பிள்ளையார் சுழி போடுகின்றோம். நாளுங்கிழமையும் பிள்ளையார் பூஜை செய்கிறோம். நாடெங்கும் பிள்ளையார் முதலில் காட்சி யளிக்கிறார். பிள்ளையார் கோயில் இல்லாத ஊர் நம் நாட்டில் இல்லை. அரசமரத்தடி, குளக்கரை, எங்கும் பிள்ளையாரைக் காணலாம். பிள்ளையாருக்குக் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டால் எடுத்தகாரியம் சித்தியாகும் என்ற நம்பிக்கை நமக்குள்ளது. பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் நலம் எனச் செய்கிறோம். பிள்ளையாரை வழிபட்டே கலியாணம் கார்த்திகை நடக்கின்றன. பிள்ளையாரைப்பாடி வணங்கியே எதையுந் தொடங்குகிறோம். பிள்ளையார் வழிபாட்டை எல்லாருமே பக்தியுடன் செய்கிறார்கள்.

தமிழில் ஓம் எழுதுங்கள். அந்த வடிவே கணபதி, கணபதி ஓங்கார வடிவம். யானையே ஓம் என்று தெளிவாகப் பிளிறும். யானை கம்பீரமான தோற்றமும், அயரா உழைப்பும், திடபலமும் அறிவும் கொண்டது. தாவர உணவையே உண்டு சக்தியுடன் பொலியும் யானை முகத்தைக் கணபதிக்குத் தந்தனர் அருட்பெரியார். கணபதி உருவைக் க்வனியுங்கள்; கால் மடித்து அமர்ந்த கோலம் அகரம்போலும், வயிறு மகரம் போலும், தலையும் துதிக்கையும் உகரம் போலும். அகர உகர மகர ஓங்காரவடிவம் கணபதி வடிவானது. குண்டலி சக்தியே முஷிகம். பாசத்தை அறுக்கும் பாசாங்குசமும், பதியறிவைத் துலக்கும் கொம்பெழுத்தாணியும், ஏழுலகும்

ஈச்வர சக்தியில் அடக்கம் என்பதற்காக மோதகமும், ஈச்வர சக்தியை உபாசிக்கும் மந்திரஜப சாதனையைக்காட்ட ஜபமாலையும் கணபதி கையிற் காண்கிறோம். நான்கு கரங்கள் சரியை கிரியை யோக ஞான சாதனங்களால் தர்மார்த்த காம மோட்சப் பயன்களைப்பெறும் அறிகுறிகளாகும். சிவனுக்குப் போலவே கணபதிக்கும் முக்கண் உண்டு. நடுக்கண் ஞானக்கண்.

கடவுள் ஒன்றே. அது அனந்தகுண சின்மயம். அதன் குணங்களுக்கே பலபெயர் வடிவுகளைத் தந்து உபாசிக்கிறோம். இலிங்கம் அந்தராத்மவடிவம். நடராஜா ஐந்தொழில் வடிவம்; முருகன் சிவக் கனல் வடிவம்; தட்சிணாமூர்த்தி மோன ஞான போதி வடிவம்; பராசக்தி பரம்பொருளின் இச்சாகிரியா ஞான சக்தி வடிவம். அவ்வாறே கணபதி இறைவனுடைய திவ்ய வல்லபையின் வடிவம். அகப்பொருள் புறப்பொருள் இரண்டிற்கும் முதன்மையாக நிற்பது கணபதியே. சிவகணங்களுக்குத் தலைமை பூண்டு அசுர பலத்தை அழிக்க முனைந்ததும் கணபதியே. ஔவையார் கணபதி உபாசனையால் சக்தியும் முக்தியும் அடைந்தார், லோகமான்ய திலகா கணபதி உபாசனை செய்தே மேடையேறினார். கணபதி எங்கும் காரிய சித்தி அளிக்க முன்னிற்கிறார்.

ஆவணி சதுர்த்தி அன்று கணபதி வழிபாடு நாடெல்லாம் நடக்கிறது. நாடோறும் வழிபாடு செய்தல் நலம். காலை எழுந்து வெளியே சென்று கொன்றை, வில்வம், அலரி, பவள மல்லிகை தாமரை முதலிய மலர்களைக் கொய்து வருக. நன்றாக நீராடி, தூய ஆடையணிந்து சிவசின்னங்கள் பூண்டு பக்தியுடன் பூஜையறைபுகுக. திருவிளக்கேற்றுக. உறுதியாக அமர்க. கணபதி திருவுருவை ஐந்து நிமிஷம் தியானம் செய்க. பிறகு ஓம் கணபதி என்ற மந்திரத்தை ஜபமாலையில் 108 தடவை சொல்லுக. ஜபம் முடிந்தபிறகு பிள்ளையாரைச் சுத்தம் செய்க; அணிமணிகள் சூட்டுக; தோத்திரம்செய்தபின் மலர்களைத் தூவி அருச்சனை செய்க; நிவேதனம் செய்து தீப தூபம் காட்டுக; வரம் வேண்டித் துதி பாடுக; இசைக்கருவிகளுடன் பாடலாம். முடிவில் ஒரு நிமிஷம் தியானம் செய்து இதயத்தில் உபாசனா மூர்த்தியை ஆவாகனம் செய்து கொண்டெழுக.





# விநாயகர் அகவல்

(ஔவையார்)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித் [து]
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

ஆரு தாரத் (து) அங்குச நிலையும்
பேரு நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக சாலமும் சதுர்முக சூக்குமமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் [து] எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிய வித் (து)
இருள்வெளி யிரண்டிற் (கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்[து] அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித் (து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
ஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!



# ஆத்மபோதம்

(சங்கரர்)

ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குரிய நேரான வழி நெருப்பில்லாமல் சமைக்கமுடியாது. அதைப்போலவே ஞானமின்றி விடுதலை கிட்டாது. கர்மமும் சடங்குகளும் அஞ்ஞானத்தைப் போக்கா. கும்மிருட்டையும் போக்கும் ஒளிபோல ஞானம் தவறாமல் அஞ்ஞானத்தை அழிக்கும்.

விருப்பு வெறுப்புகள் மலிந்த சம்சாரமாகிய இத்தோற்ற உலகம் உண்மையில் கனவு போன்றது. கனவு நீடிக்கும்வரையில் அது உண்மைபோலவே இருக்கும். விழித்ததும் அது பொய்யாகும். நீர்க்குமிழிகள் போல இவ்வுலகங்கள் பரமனிடம் தோன்றியும் தங்கியும் கறைந்தும் விடுகின்றன. அவனொருவனே எப்பொருளுக்கும் முதற்காரணமும் ஆதாரமுமாவன்.

நேதி! நேதி! இதுவன்று, இதுவன்று, என்ற வாக்கியத்தின் உதவியால் வரம்புகள், கட்டுப்பாடுகள் யாவற்றையும் விலக்கி ஜீவான்மாவுக்கும் பரமான்மாவுக்குமுள்ள ஐக்கியத்தை உணர வேண்டும். உடல் முதலிய பொருள்கள் அஞ்ஞானத்தினின்று உதித்தவை; நீர்க்குமிழிகள் போல அவை மறைந்து போகக்கூடியவை. வரம்புகள் அற்ற ஆத்மா இவற்றினின்று வேறானது. பிறப்பும், முதுமையும், அழிவும், மரணமும் எனக்கில்லை. நான் உடலினின்று வேறானவன், சப்தம் முதலிய விஷயங்கள் என்னுடன் தொடர்பில்லாதன. புலன்களினின்று வேறானவன் நான்.

நான் மனம் அல்லேன். ஆகவே, துயரோ, விருப்போ, வெறு--ப்போ, பீதியோ எனக்கில்லை. வேதம் கூறுவதுபோல ஆத்மா புலன்களுமன்று, மனமுமன்று, அது யாதொரு வரம்புகளுக்கும் உட்பட்டதன்று. நான் நிர்க்குணன், நிஷ்கிரியன், நித்தியன், விகற்பமற்றவன், தூயன், மாறுதலற்றவன், உருவற்றவன், நித்தியமுக்தன், நிர்மலன். ஆகாயம்போல் நான் எதிலும் உள்ளும் புறமும் பரவியுள்ளேன். நான் அழிவற்றவன். யாவர்க்கும் என்றும் நிலையான உண்மை. நான் பற்றற்றவன், வரம்பற்றவன், அசலன்.

நானே பிரம்மம் என இடைவிடாமல் மனத்தில் பதியவைத்தால், அது அஞ்ஞானக் குழப்பத்தைப் போக்கும். ஜீவரசம்போல அது பிணியாவற்றையும் நீக்கும். தனியிடம் ஒன்றில் அமர்ந்தும், காமவிச்சைகள் அற்றும், புலன்களை அடக்கியும் அந்த ஏக அனந்தப் பரம்பொருளின் தியானம் செய்யவேண்டும். ஞானம், அஞ்ஞானத்தை அழித்ததும் ஆத்மா வெளிப்படும், அருணோதயம் இருளைக் கிழித்ததும் பகலவன் உதயமாவது போல.

உபாதிகள் நீங்கும்போது, நீர் நீரிலும், இடம் இடத்திலும், ஒளி ஒளியிலும் கலந்து விடுவதுபோல ஞானி இறைவனிடம் முற்றும் கலந்துவிடுகிறான். எது சர்வ வியாபியாயும் சுற்றிலும் மேலுங் கீழும்பரவியும் சச்சிதானந்தமாயும் இரண்டற்றதாயும், முடிவற்றும் நித்தியனாயும், ஏகனாயும் உளதோ அதுவே பிரம்மன் என்று அறி. பிரம்மன் இப்பிரபஞ்சத்தினின்று வேறானவன். பிரம்மனை அன்றி பிறிது ஒன்றுமில்லை. பிரம்மனின்று வேறானதென்று காணப்படின் அது கானல் நீர் போலப் பொய்யானது.

ஞானக்கண்ணுடையவன் பிரம்மனை, சச்சிதானந்தனை எப்பொருளிலுங் காண்பான். ஞானக்கண் இல்லாதவன் இங்ஙனங் காணமுடியாது. குருடன் பிரகாசிக்கும் பகலவனைப் பார்க்க முடியாதது போல.

**எல்லா விஷயங்களிலும் எல்லோரும் சுதந்தரமாயிருக்கவேண்டுமென்று எண்ணி விடக்கூடாது சில விஷயங்களில் சுதந்திரமும் சில விஷயங்களில் பரதந்திரமுமாயிருக்க வேண்டியிருக்கிறது.**

**ஜென்ம-மரணம் துக்கமென்று தெரியாதவர்களுடன் அடிக்கடி பழகக் கூடாது.**



# யோக ஆசனங்கள் : :

(S. A. P. சிவலிங்கம்)

## 60, மச்சியாசனம்

### (பழகும்விதம்)

சுத்தமான சமதள கெட்டிவிரிப்பின்மே கால்கள் இரண்டையும் முன்பக்கம் நீட்டி அகட்டியுட்காரவும்.


பின் நீட்டியிருக்கப்பட்ட வலது காலை மடக்கி இடது கால் தொடையின்மேல் வைத்து, இடதுகாலையும் மடக்கி வலதுகால் தொடையின்மேல் வைக்கவும். இதுவே பத்மாசனம்.

பின் பின்பக்கம் சிறிது இடுப்புக்கு நேராக தள்ளி கைகளிரண்டையும் கீழே யூன்றவும். சிறிது சிறிதாக முழங்கைகளை மடக்கவும்; சுவாசம் முழுவதும் வெளிவிட்டுவிடவேண்டும். இவ்வாறு கைகளை யூன்றியே பின்பக்கம் மல்லாந்து படுக்கவும். கைகளின் உதவியைக் கொண்டேபடுக்கவும். பத்மாசன நிலை மேல் தூக்கக் கூடாது. பத்மாசனநிலையில் முழங்கால்கள் நன்கு கீழேபடிந்திருக்கவேண்டும்.

கைகளிரண்டையும் தலைக்குப் பின்பக்கம் கொண்டு வந்து உள்ளங்கை கீழே படியும் வண்ணம் வைத்து கழுத்து, தலை, முதுகு பல பாகங்களும் மேல் தூக்கி, கழுத்தை பின் பிடரி பக்கமாய் மடித்து உச்சந்தலையை மட்டும நன்கு கீழே படியவைத்து கைகளிரண்டையும், இடது, வலது பாதங்களின் பெருவிரலைப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

இடது தொடையில் வலது பாதகால் கட்டை விரலை இடது கையாலும், வலது பாத தொடையில் இடதுபாத கால் கட்டைவிரலையும் வலது கையாலும் பிடித்துக்கொள்ள வேண்டும். மார்பு, வயிறு முதலிய பாகங்கள் மேல் நோக்கியே இருக்கவேண்டும். சுவாசம் சிறிது வேகமாக உள்ளிழுத்து

வெளிவிடவேண்டும். இவ்வாறு ஐந்தாறு சுவாசங்கள் அதி தீவிரமாக வெளிவிடும்வரை இருந்தபின் ஆசனத்தைக் கலைக்கவும். சித்திரம் 60 பார்க்கவும்.



வாயால் சுவாசிக்கவோ, வெளி விடவோ கூடாது. அதிக நேரமும் இவ்வாசன நிலையில் இருக்கக்கூடாது. இது முக்கியமானவிதி. இவ்வாறிருந்தபின் ஆசனத்தைக் கலைத்து அவரவர்களின் தேவைக்குத்தக்கவாறு மூன்று தடவைகள் வீதம் செய்யலாம்.

## கலைக்கும் விதம்

இரண்டுகால்களின் விரல்களை கைகளால் பிடித்திருப்பதை எடுத்து, கைகள் இரண்டையும் பின்பக்கம் கொண்டுவந்து முன்போல் உள்ளங்கைகளை கீழே யூன்றி தலையைக் கீழே வைத்து, முழங்கையையும் கீழே யூன்றி அதன் உதவியால் மெதுவாக மேல் எழுப்பி நிமிர்ந்து பத்மாசன நிலையில் உட்காரவும். இந்நிலையில் சுவாசம் சிறிது சுவாசம் உள்ளிழுத்துக் கொண்டே மேலெழும்பவும், பின் கால்களிரண்டையும் முன்பக்கம் நீட்டி சிறிது மல்லாந்து படுத்து சிரமபரிகாரம் செய்து மீண்டும் செய்யவும்.



ஆண், பெண் அனைவரும் செய்யலாம். பெண்மணிகள், கர்ப்பகாலம், ருது, மாதவிடாய், சத்திர சிகிச்சை செய்து கொண்ட சமயங்கள் தவிர மற்ற காலங்களில் செய்து பயனடையலாம்.

## பலன்கள்:

கழுத்து, கால்கள், கால்களின் மூட்டுகள், வயிறு இவைகளுக்கு நல்ல பயிற்சியுமாகும். மலேரியாக் காச்சலை நிவர்த்திக்கும். குளிர் ஜுரத்தையும் குணப்படுத்தும். மலஜலம் நன்கு வெளியாகும். முதுகுக்கு நல்ல பலத்தையும், எலும்புகளுக்கு இளமையையு முண்டாக்கும். இருதய நோய்வராது. கூட்டுமார்பை ஒளித்துக்கட்டும். முகப்பொலிவு ஏற்படும்.

மீண்டும் ஞாபகப்படுத்துகின்றோம். நேயர்களுக்கு:—

இந்த ஆசன நிலையில் அதிகநேரம் இருக்கக் கூடாது: அவ்வாறு இருந்தால் உடனடியாககாய்ச்சல்வரும்.



குன்றிமணிக்குத் தன்குற்றமான கறுப்புத் தெரியாததுபோல் தன்குற்றம் தனக்குத்தெரியாதவன் தான் பிறரைக் குற்றம் கூறுவாறுதலால் தன் குற்றத்தை ஆராய்ந்து அதை விட்டு விட முயற்சிப்பதுடன் பிறரைக் குறை கூறுதலையும் ஒழித்துவிடவேண்டும்.

# எக்காலம்?

(பரமஹம்ஸ தாசன்)

வாக்கு மனங்கடந்த மாதேவ! நின்கழலை,
ஏக்கற்றென் னுள்ளத் திளைந்திருப்ப தெக்காலம்? 1

போக்குவர வற்ற புனிதக் குகையமர்ந்து,
நீக்கமற நிற்குமுனை நேசிப்ப தெக்காலம்? 2

ஆக்கை, பொருள், ஆவியெலாம் அடிமலரில் அர்ப்பணித்து,
நோக்கருநின் நோக்கை நுகர்வதினி எக்காலம்? 3

பார்க்குமிட மெல்லாம்நின் பைம்பொற் றிருவழகைப்
பார்த்துக் களிதுரும்பப் பாட்டிசைப்ப தெக்காலர்? 4

ஊக்கமுடன் உள்நோக்கி உன்னவரி தாய்விளங்கும்?
சூக்குமத்தில் சொக்கிச் சுகம்பெறுவ தெக்காமல்? 5

ஞான குருபாதம் நன்னி, மலமகன்ற
ஆனந்த சிற்சுகத்தில் ஆழ்ந்திருப்ப தெக்காலம்? 6

நினைத்து, நினைத்து, நினைப்பற்றென் னுள்ளகத்தே
நினைப்பற்றி நீயாக நிற்பதினி எக்காலம்? 7

தூங்காமல் தூங்கி, என்னுள் தூய மறைச்சிலம்பின்
ஓங்கார யாலொலிகேட் டுருகுவதும் எக்காலம்? 8

மாறியொரு கால்தூக்கும் வள்ளல் திருநடத்தை,
மாறுதென் னுட்கண்டு மகிழ்ந்திருப்ப தெக்காலம்? 9

உள்ளத் தொளியாய்நீ, ஓங்கி வளர்ந்தெனது
கள்ளத்தைப் போக்கி, உண்மை காட்டுவதும் எக்காலம்? 10

மாய்கையெனும் பேயின் வசப்பட்டு மாளாமல்,
தூயனும் நின்னடித்தேன் துய்த்திருப்ப தெக்காலம்? 11

நானென்னும் ஆணவத்தை நையப் புடைத்தெங்கும்
தானாக நிற்குமுனைச் சார்ந்திருப்ப தெக்காலம்? 12

அச்சப் பெரும்பேயை அகலத் துரத்திவிட்டு இப்
பச்சைக் குழவியைநீ பார்த்தணைப்ப தெக்காலம்? 13



சீறிவிழும்புன் சினப்பாம்பைத் துண்டாக்கி,
ஆறிவரும் நின்னன் பமுதருத்தல் எக்காலம்? 14

கட்டுக் கடங்காக் கடுங்காமப் பேயகற்றி,
மட்டறுநின் காதல் மலர்வதினி எக்காலம்? 15

நாசப் பொறுமைதனை நைத்துப் பொடிபடுத்தி,
பாசமுடன் அன்பர் பதந்தொடர்வ தெக்காலம்? 16

குரோத மெனுங்கொடியோன் கொட்டமடக்கியுன்ப்ர,
சாதத்தேன் உண்டின்ப தாகமறல் எக்காலம்? 17

ஈயாத லோபி,தலை என்றென்றும் தூக்காமல்,
மாய்த்துன்மேல் தாராள வாஞ்சைகொளல் எக்காலம்? 18

குட்டிக் குரங்கினைப்போல் கூத்தாடும் பேய்மனதைக்
கட்டிக் கருதியுனைக் காண்பதினி எக்காலம்? 19

உள்ளறிவு பொங்கி, உணர்ச்சிக் கடல்பெருகி,
வெள்ளம்போல் பாட்டலைகள் வீசுவதும் எக்காலம்? 20

ஆடிச் சுழலில் அலையும் சருகினைப்போல்,
வாடித் தவிக்குமெனை வந்தணைப்ப தெக்காலம்? 21

தெள்ளத் தெளிந்த சிவஞான வெள்ளத்தை,
அள்ளிப் பருகிடவாய் ஆற்றுவதும் எக்காலம்? 22

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
விந்தைப் பொருள்கண்டு மெய்மறப்ப தெக்காலம்? 23

சத்துசித்து ஆனந்தத் தன்மயமாம் பூரணத்தைச்
சித்தத்துள் கண்டதுவாய்த் தோர்ந்துநிற்ப தெக்காலம்? 24

உலகாள் அரசே,என் உள்ளக் குடில்குந்து,
அலகில்விளை யாடல்நீ யாற்றுவது எக்காலம்? 25

பாசப் பெருங்கடலுள் பாலன்யான் வீழாதுன்
தாசனாய் என்றென்றும் சார்ந்திருப்ப தெக்காலம்? 26

அலையும் மனமடங்கி ஐய,நினை உட்கலந்து,
மலரும் மணமும்போல் வாழ்'தினி எக்காலம் 27

பண்ணும் ஒலியும், பழமும் சுவையும்போல்
நண்ணரியுனைக் கூடி நலம்பெறுவ தெக்காலம்? 28

எள்ளிலுறை எண்ணெயைப்போல் எங்கும் நிறைத்தவுனை
அள்ளிக் கலந்து, அகங்குளிர்வ தெக்காலம்? 29

இன்பத் திருவடிச்கீழ் என்றென்றும் வாழ்ந்திருக்கும்,
அன்பு வரம்நீ, அருள்வதினி எக்காலம்? 30

— — —

# பிள்ளையார் சதுர்த்தி

(காமகோடி)

**"ஞானம் நிறைந்தவர்களுடைய மௌனமே மௌனம்
சக்திநிறைந்தவர்களுடையபொறுமையே பொறுமை'**

(காளிதாசர்)

ஒரு பிராணியையும் இம்சை செய்யாது, நாணலையும், தழைகளையுமே உட்கொண்டு உலகிலுள்ள எல்லாப் பிராணிகளை விட அதிக பலம் படைத்து நிற்கும் யானையே பொறுமையின் உருவம். பரம் பொருளான சிவபெருமான் நமக்கு முதலில் ஈன்று கொடுத்தது பொறுமையையே. "பொறுத்தார் பூமியாள்வார்" பொறுமையே எல்லா இடையூறுகளையும் நீக்குவது. விக்ன ராஜரே மகாகணேசர்.

யானைக்குட்டிக்கு அழகு இரு தந்தங்கள். அழகைவிட அறிவு மேலானது. தன்னழகில் ஒரு பாதியை ஒடித்து அறிவிற்கு உதவினார் ஏகதந்தன். (ஒற்றைக்கொம்பன்) தன தந்தத்தை ஒடித்து அறிவு நூலாகிய பாரதத்தை எழுத அதையே எழுது கோலாக உபயோகித்தார். அகிம்சையும், பலமும், பொறுமையும், அறிவும், படிக்கும் பிள்ளைகளுக்கு முதலில் வேண்டும்.

பிள்ளைகளுக்கெல்லாம் முதல்பிள்ளை பிள்ளையார்.
அவருடைய தாயார் எல்லோருக்குந்தாயார்,
அவருடைய தகப்பனார் எல்லோருக்குந்தகப்பனார்.
அவர்களுடைய பிள்ளை நாம் எல்லோரும் போற்றும் பிள்ளையார்.

சந்து பொந்துகளிலெல்லாம் போற்றுகிறோம். தெருச்சந்துகளிலும்பெரிய இடத்துப் பிள்ளையைப் போற்றுகிறோம். அகிம்சையும் பலமும், பொறுமையும், அறிவும் உருவெடுத்த பிள்ளையாரை ஆவணி வளர்பிறைச் சதுர்த்தி அன்று சிறுவர்கள் எல்லோரும் பூஜிப்போம். ஈசன் எந்தைக்கு நாம் எல்லோரும் சிறுவர்களே. யானைக்குட்டிக்குக் காட்டிலும் தோப்பிலுமுள்ள தழைகளையெல்லாம் ஒடித்துவருவோம்.

## அறிவிற்கு ஆதாரம் அக்ஷரம்.

"ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்தாகமங்களும்
ஐம்பதெழுத்தின் அடைவை அறிந்தான்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத்தாமே"

என்கிறார் திருமூலர் தனது திருமந்திரத்தில். ஐம்பத்தொரு அட்சரங்களும் மந்திர பீடேஸ்வரி எனப்படும் மாத்ருகா சரஸ்வதியின் ஒவ்வோர் உறுப்புக்கள் என மந்திர சாஸ்திரம் கூறுகிறது, அக்ஷர



பூரணமான மந்திர பீடேஷ்வரியின் பிரதிஷ்டை திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் காணலாம். குருவானவர் சீடனுக்கு மாத்ருகா மந்திர தீக்ஷாபிஷேகம் செய்விக்கும் காலத்தில் அவ்வபிஷேக காலத்தில் ஒவ்வொரு பீஜக்ஷரங்களுக்குமுரிய ஒவ்வொரு ஓஷதியை (இலை) போடும்படி கூறப்பட்டிருக்கிறது.

அந்தப் பீஜாக்ஷரத்தினால் ஏற்படும் ஆத்ம சக்திக்கு அந்தந்த ஓஷதிதுணை செய்கிறது என்பது கருத்துப்போலும். மகாகணபதிஉபாசனைக்கு இருபத்தொரு பத்திரங்கள்.

அவையாவன:-

முல்லை இலை, கரிசிலாங்கண்ணி இலை, வில்வம்-வெள்ளறுக்கம்புல் வேரோடு கூடியது, இலந்தை-இலை, ஊமத்தை இலை, துளசி, வன்னி இலை, நாயுருவி இலை, கண்டங்கத்தரி இலை, அரளி இலை, எருக்கிலை, மருதை இலை, விஷ்ணுகிராந்தி இலை, மாதுளை-இலை, தேவதாரு இலை, மருவு, அரச இலை, ஜாதி, மல்லிகை இலை, தாழை இலை, அகத்திக்கீரை இலை.

பிள்ளையார் சதுர்த்திக்கு இவ்விருபத்தொரு இலைகளையும் சேகரித்து அன்று அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மாவெனும் போர்வை (மா-யானை) போர்த்து அன்பெனும் நம் பிள்ளையாருக்கு அன்புக்குரிய இனிமையெனும் மதுரத்தைப் பூரணமாக உள்ளடக்கி மாவெனும் போர்வை போர்த்திய இருபத்தொரு மோதகங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். நமது பிறவி பூரணத் தன்மையடைவதற்குத் துணை செய்யும் இருபத்தொரு விதமான அனுக்கிரகத்தை வேண்டிக்கொண்டு சமர்ப்பிக்க வேண்டும். இதனால் கிடைக்கும் பலன்களாவன:- தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோட்சம், முகத்தில் பால்வடியுந் தன்மை, வீரலட்சுமி கடாட்சம், விஜயலட்சுமி கடாட்சம், எல்லோரும் தன்னிடம் அன்பாயிருக்கும் தன்மை, குடும்பத்தில் காப்பரட்சை, மக்கட்பேறு, நுண்ணறிவு, நற்புகழ், சோகத்தினால் வாடாத் தன்மை, அசுபங்களை அகற்றல், தன்வாக்கிற்கு எதிர்வாக்கு அடங்கிப்போதல், கோபங்கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை பிறர் ஏவும் அபசாரமடங்குதல், துயர் தீர்த்தல்.

யது வம்சத்தில் பிறந்த பிரசேனன் என்பவன், விலைமதித்தற்கரியதும், சுயம்பிரகாசமுடையதும், சூரியமண்டலத்திலிருந்துகிடைத்ததுமான சுயமந்தகம் என்னும் இரத்தினத்தைத் தரித்துக் கொண்டு காட்டின்வழியே குதிரை ஏறிச்செல்ல அவனை ஒரு சிங்கம் கொன்றது. அச்சிங்கத்தைக் காட்டில் தெய்வீககரடி உருவங்கொண்ட ஜாம்பவான் கொன்று அம்மணியை வெகுதூரம் பாதாளத்திலுள்ள தனது குகையில் குழந்தையின் தொட்டிலில் கட்டினார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒருசமயம் சுக்கிலபட்ச சதுர்த்தியிலன்று சந்திரனைப்பார்த்தார். சந்திரமண்டலத்திற்கு அதிஷ்டானதேவதையான சந்திரன் ஒருமுறை தன் அழகின் செருக்கால் விநாயகரைப் பழித்தார். அப்பழிப்பால் அச்சந்திரனை ஒருவருமே பார்க்கக்கூடாதென்ற சாபம் ஏற்பட்டது. அச்சாபத்தின் நிவர்த்தியைச் சந்திரன் வேண்ட, சாயங்காலத்தில் ஆகாயத்தில் பார்த்த உடனே கண்ணுக்கெதிரே நிற்கும் நாலாம்பிறைச் சந்திரனை மாத்திரம் பார்க்கக்கூடாதென்று சாபம் ஏற்பட்டது. அச்சாபத்தின் நிவிர்த்தியைச் சந்திரன் வேண்ட, சாயங்காலத்தில் ஆகாயத்தில் பார்த்தவுடனே கண்ணுக்கெதிரே நிற்கும் நாலாம்பிறைச் சந்திரனை மாத்திரம் பார்க்கக்கூடாதென்று அச்சாபம் குறைக்கப்பட்டது.

நாலாம்பிறைச்சந்திரனைப் பார்த்தவனுக்கு வீண்பழி சுமரும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒருதடவை நாலாம் பிறைச் சந்திரனைப் பார்த்தார். ஈஸ்வராவதாரமாக இருந்தாலும் மனிதவேஷம் தரித்தபிறகு பிரபஞ்ச சட்டங்களுக்குத் தானும் உட்பட்டே தீரவேண்டுமென்னும் தத்துவத்தை விளக்கினார். பிரசேனனைக் கொன்றுசுயமந்தகமணியை ஸ்ரீ கிருஷ்ணபகவானே அபகரித்தார் என்னும்வீண் அபவாதத்திற்கு உட்பட்டார் உலகத்தோருக்கு உண்மையைத்தெரியப்படுத்தித் தன் அபவாதத்தை நீக்கிக்கொள்ளப் புறப்பட்டார். காட்டிற்குச் சென்றார். பிரசேனன் பிரிந்துபோன வழியை அவனது குதிரையின் காலடிச் சுவட்டைக்கொண்டு தொடர்ந்து சென்றார். ஜாம்பவானின் குகை துவாரத்தில் குதிரையையும் பிரசேனனையும் கொன்ற சிங்கத்தின் உயிரற்ற சரீரத்தையும் பார்த்தார். குகைக்குள் வெகுதூரம் சென்றார். ஜாம்பவானின் புத்திரியான ஜாம்பவதி தன் தம்பியைத் தொட்டிலிட்டு குழந்தை அழாதிருக்குமாறு தாலாட்டிக் கொண்டிருந்தாள். தொட்லின் விதானத்தில் சுயமந்தகமணி கட்டியிருப்பதைக் கண்டார்.

ஜாம்பவான் ஸ்ரீ கிருஷ்ணனோடு யுத்தம் செய்தார். பகவானின் பலத்தைக்கண்டு நம் குலதெய்வமான ஸ்ரீ ராமனே இவன் என்றுகண்டுகொண்டார். ஜாம்பவதியையும் சுயமந்தக மணியையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்தார். ஜாம்பவதி கல்யாணம் நடந்தது.







## பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜய ஜய
சீரிய ஆனைக் கன்றே ,, ,,
அன்புடை அமரரைக் காப்பாய் ,, ,,
ஆவித் துணையே கணபதி ,, ,,
இண்டைச் சடைமுடி இறைவா ,, ,,
ஈசன் தந்தருள் மகனே ,, ,,
உன்னிய கருமம் முடிப்பாய் ,, ,,
ஊர்நவ சந்தி உகந்தாய் ,, ,,
எம்பெரு மானே இறைவா ,, ,,
ஏழுலகுந் தொழ நின்றாய் ,, ,,
ஐயா கணபதி நம்பியே ,, ,,
ஒற்றை மருப்புடை வித்தகா ,, ,,
ஓங்கிய ஆனைக் கன்றே ,, ,,
ஔவிய மில்லா அருளே ,, ,,
அஃகறு வஸ்து ஆனவ ,, ,,
கணபதி என்வினை களைவாய் ,, ,,
நப்போல் மழுவொன் றேந்தியே ,, ,,
சங்கரன் மகனே சதுரா ,, ,,
ஞயநம் பினர்பா லாடியே ,, ,,
இடம்படு விக்கின விநாயகா ,, ,,
இணங்கிய பிள்ளைகள் தலைவா ,, ,,
தத்துவ மறைதரு வித்தகா ,, ,,

நன்னெறி விக்கின விநாயகா ஜய ஜய
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ,, ,,
மன்று ளாடும் மணியே ,, ,,
இயங்கிய ஞானக் குன்றே ,, ,,
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ,, ,,
இலகக் கொம்பொன் றேந்தியே ,, ,,
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ,, ,,
அழகிய ஆனைக் கன்றே ,, ,,
இளமத யானை முகத்தாய் ,, ,,
இறகுபதி விக்கின விநாயகா ,, ,,
அனந்த லோடா தியல் அடிதொழ அருளே!



## ஸ்ரீமுன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகாசமேத முன்னநாதசுவாமி

## மகோத்சவ விஞ்ஞாபனம்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 2-8-58 | சனிக்கிழமை |
| சிவனடியார்திருவிழா | 24-8-58 | ஞாயிற்றுக்கிழமை |
| பிக்ஷாடனர்திருவிழா | 25-8-58 | திங்கட்கிழமை |
| நடேசர்திருவிழா | 26-8-58 | செவ்வாய்க்கிழமை |
| வேட்டைத்திருவிழா | 27-8-58 | புதன்கிழமை |
| தேர்த்திருவிழா | 28-8-58 | வியாழக்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | 29-8-58 | வெள்ளிக்கிழமை |



# அறிவுரை.

[ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியசுவாமிகள்]

தினசரி கோபுர தரிசனம் செய்து சற்று நேரமாவது கடவுளைத் தியானிக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறையாவது ஆலயங்களுக்குச்சென்று, நாம பாராயணமோ, பஜனைகளோ செய்யவேண்டும். இப்படிச் செய்துவந்தால் சாசுவத நன்மைகளை யடையலாம்.

* * * * * *

மனிதன் தன்தவறுகளை நினைத்துப் பார்க்கவேண்டும். அவற்றை உணர்வதே புண்ணியம். ஒருவன் நல்வழிப்பட்டால் அதுவே சமுகத்திற்குக் கௌரவம், நாட்டுக்கு நலம்.

* * * * * *

வழிகள் பலவிதம். வாகனங்களும் பலவிதம். அநேக மதங்கள் ஏற்பட்டாலும் எல்லாம் ஒரே இடத்தில் தான் போய்ச் சேருகின்றன. ஆகையால் மதத்தின் பெயரால் சண்டை போடத் தேவையில்லை.

* * * * * *

சிறுவர்கள் காலையில் எழுந்தவுடன், தங்கள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சூரியன் இருக்கும் திசையை நோக்கிக் குறைந்தது பன்னிரண்டு நமஸ்காரங்களாவது செய்யவேண்டும்.

* * * * * *

கஷ்டம் நம்முடன் கூடப்பிறந்தது போல் தோன்றுகிறது. கஷ்டம் என்ற பாரத்தை ஞானம் என்ற நீரில் அமிழ்த்தி அதன் பளுவைக் குறைக்கவேண்டும்.

ெ ெ ெ ெ ெ ெ

நமதுமதம் எக்காலத்துக்கும் மனித குலத்திற்கு நன்மை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று நாம் விரும்பினல் இம்மதத்தைப் பின்பற்றும் நாம் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்கவேண்டும். பக்திமான்களாக இருக்கவேண்

டும். நமது சிந்தனையிலும், செயலிலும், வைதிக மதத்தின் கோட்பாடுகளை உறுதியாகத் தொடர்ந்து பின்பற்றி வரவேண்டும்.

உண்மை சோஷலிசம் ஆடம்பர வாழ்க்கைத் தரத்தைத் தவிர்த்து, சிக்கனமான வாழ்வுநடத்துவதன் மூலம்தான் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்தரம் எளிய அளவிலே இருப்பதுதான் எல்லோருக்கும் நலம். அப்போது எல்லோரும் இன்புற்றிருக்கத் தேசத்தில் போதிய செல்வம் இருக்கும்.

நல்ல உயர்ந்த பண்பட்ட மனத்திலிருந்து தான் தன்னலமற்ற சேவா உணர்ச்சி, தெய்வபக்தி, எல்லோரிடமும் அன்பு, நல்லெண்ணம் முதலிய நற்குணங்கள் பிறக்கின்றன. இந்த நற்குணங்களுக்குத்தான் பண்பாடு, கலாசாரம் என்று பெயர்.

ஆண்டவனுக்குப் படைக்காமல் வயிற்றுக்காக மட்டும் பொருட்களை நாம் உண்டால், நம்மை உயர்த்துவதற்குப் பதிலாக நாம் தாழ்ந்து விடுவதற்கு இவை வழி ஏற்படுத்திவிடும். நாம் ஆடம்பரங்களையெல்லாம் விட்டு விட்டு அத்தியாவசியமான தேவைகளுடன் மட்டும் நிறுத்திக்கொண்டு, கருணை மூர்த்தியான இறைவனின் பிரசாதங்களாக இவற்றை நாம் நன்றியுடன் உபயோகிப்போமானால், நாம் வீழ்ச்சி யுறுவது தடுக்கப்படுவதுடன் ஆத்மிக உயர்வு பெறலாம்.

சமயநெறிகள், குலாசாரங்கள் இவைகளின் உண்மைத் தத்துவங்களையும், பிரயோசனங்களையும் உணர்ந்து, ஒவ்வொருவரும் தம்மதத்தின் தத்துவத்தை அனுபவத்தில் கொண்டு வருதலினாலும், தம்முடையவும் தம் ஜாதியினுடையவும், சேம நலன்களைவிட, பிற சாதியினரின் கஷ்டங்களைத் தீர்ப்பதையே தம் முதற்கடமை என்று கங்கணங் கட்டிக் கொள்வதினாலும்; இவற்றின் பேரால் ஏற்படும் பூசல்களும், சண்டைகளும் நீங்கி ஆத்ம க்ஷேமமும், சமூக சாந்தமும் ஏற்படும்.

—❋—



# மும்மதம்.

…❋…

(ரசபதி)

யானைக்குக் கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என மும்மதங்கள் உண்டு. கணபதிக்கு யானை உறுப்புக் கழுத்திற்கு மேலிருத்தலின் மும்மதத்தன் எனல் பொருந்துமோ என வீணாகப் பலகாலம் விவாதித்து, மும்மதம் என்பது யானைக்கு அடைமொழி என்று முடிவு கட்டுவர் சிலர்.

மும்மதம் என்பன இச்சா, ஞானக் கிரியைகளின் உருவகம் என்றார் சிவாக்ர யோகிகள். அங்ஙனமேல் முத்தர்போற்றும் முருகனையும் மும்மதன் எனல் வேண்டும். அங்ஙனம் கூறும் வழக்காறுஇல்லை.

ஐந்தெழுத்தின் பேதமான நாலெழுத்தும், மூன்றெழுத்தும், இரண்டெழுத்தும், ஓரெழுத்தும்காரணபஞ்சாக்கரம், முக்தி பஞ்சாக்கரம் என வழங்குவதுபோல், மும்மதத்தின் பேதமான ஒருமதமும் இருமதமும், மும்மதம் எனப்பெறுகிறது' என்கிறார் மாதவச் சிவஞான யோகிகள்.

வாழவைத்தவர் வீழ்க; அப்போதுதான் என்பெருமை தலையெடுக்கும் என்று எண்ணும் ஏழை மதியர் சிலர் அன்னாளிலும் இருந்தனர். அவர்களுள் ஒருவன் சலந்தரன் பேறளித்த சிவத்தின் வீறழிப்பேன் என்று விரைந்தான். நற்கயிலையை நண்ணினன். உத்தமவேதியர் உருவில், அவன் முன் விமலசிவனார் வெளியானார்.

'எங்கு செல்கிறாய் அப்பா!' என்றார் இறைவர். பரத்தின் கரத்தை அழிக்கப் பறந்து வருகிறேன் என்றான் பதகன். நகைத்து நோக்கினர் நம்பர். அப்படியா! ஓ! அதற்குரிய ஆற்றல் உன்னிடம் உளதா? அதை நான் முதலில் அறியக்காட்டு என்று அறிவித்தபடியே, வலது திருவடிப் பெருவிரலால் நிலத்தில் வட்டமாகக் கோடு கீறினார் நிமலர். இவ்வட்டத்தைக் கட்டமின்றி எடுத்து உன் தலைமேல் வைத்துக்கொள்ள வல்லையேல், வேதம் போற்றும் உயர்பரத்தின் வீறழிக்க உரியவன் தான் நீ என்று உணர்ந்துகொள்வம் யாம் என்று, உள்நகைசெய்து உரைத்து நின்றார் உமாபதி.

தோள் ஆற்றல்மிக்க சலந்தரன், அரும் கடினநிலத்தை அகழ்ந்தான். வாவியெடுத்த வட்டத்தைத் தன் தலைமேல் வைத்தான். அவ்வளவில் கிறு கிறு என்றுசுழன்றது அந்த ஆழி; அவ்வளவு தானா!

இமைக்கும் முன், தருக்குடைய சலந்தரன் தலையையும் தடிந்தது. விரிந்து பெருகும் என்று எதிர்பார்த்த அவன் வாழ்வு அன்ருேடு வீழ்ந்தது. சலந்தரன் உடல் குருதி, பொறுக்க முடியாத துர்நாற்றமாய் உலகைப் போர்த்தது. அதனால் தாங்கமுடியாமல் தடுமாறிய அகில உலகமும், ஐங்கரக் கணபதியை ஆராதித்தது. உடனே பிரசந்நராயினர் பிரசந்நவதனர்- எமது ஆனைமுகப்பெருமானின் ஊற்றெடுத்த அருள்மதம், எங்கும் வியாபித்து, அப்பொல்லாத நாற்றத்தைப் போக்கியது. உய்ந்தது அதன் மூலம் உலகம். சலந்தரனைத் தடிந்த சக்கரம், அரவணையான் திருக்கரத்தில் அமர்ந்தது; ஆழியின் களங்கத்தையும் அகற்றினன் நம் அத்தன்.

"விழிமலர்ப் பூசனை யுஞற்றித் திருநெடுமால்
பெறுமாழி மீள வாங்கி
வழியொழுகாச் சலந்தரன் மெய்க் குருதிபடி
முடைநாற்றம் மாற்றும் ஆற்றல்
பொழிமதநீர் விரையேற்றி விகடநடப்
பூசைகொண்டு புதிதா நல்கிப்
பழிதபுதன் தாதையினும் புகழ்படைத்த
மதமாவைப் பணிதல் செய்வாம்"

என இவ்வரலாற்றைக் கருத்தைக் கனிவிக்கும் நடையில் கூறுகின்றது காஞ்சிப்புராணம். ஹேரம்பர் அருளாடல் முழுதும் அறிதற்கு உரியவர்கள் யார்?

'அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கணம்
மணமருள'
முழுயானை உருவாகவந்த மும்மத முதல்வனை
'முருகோட்டம் தரப்பாயும் மும்மதமும்
ஊற்றெடுப்ப முரிவில் கோட்டும்
ஒருகோட்டு மழகளிற்றை இருகோட்டு
மழகளிரு உலவக் காட்டிப்
பருகோட்டு நறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்துப் பரண்மேற் கொண்ட
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட்டத்
தடிகள் குலத்தாள் போற்றி'

எனச்சிறப்பாகக் குறிப்பிடுகின்ருர் சிவஞான யோகிகள்.



'சதகோடி விததாள சதிபாய முகபாகை குறிபாய் கடாம்
மதகோடி உலகேழும் மணநாற வருயானை வலிபாடுவாம்'

என ஒட்டக் கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியும், வாதகணபதியின் மதகணத்தை வாய் மலர்கின்றது.

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கம் எனும்
தறிநிறுவி, உறுதியாகந்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைபடுத்தித் தறுகண்பாசக்
கள்ளவினை பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு, கருணையெனும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

என்று கூறுகின்றது திருவிளையாடல் புராணம். அறக்கருணை மறக்கருணைகளை இருமதமா உடையவன் எம்பிரான் எனலை, ஆர்ந்த பொருளொடு அறிவிக்கின்றது. அபரஞான பரஞானங்களே இரு மதம்; அவைகளை இலக்கணையால் மும்மதம் என்றல் முறையென்று முடிவுகட்டி உரைப்பாரும் உளர்.

மதநீரைக்குறித்தா இவ்வளவு கூற வேண்டும்? ஆம். பாவ நாற்றத்தைப் பாழ்படுத்தி, அருள்மணம் நாறும் அப்பன் மதநீர் என்று மேலுரைத்து பாக்களையெல்லாம் ஊன்றி உணர்தற்கும் புண்ணியம் வேண்டும். மேலும், இம்மணநலம், தரிசன ஆரம்பத்திலேயே கணபதி உபாசகர் காண்தகு அநுபவம்; இதற்கு அயலாய்ப் பிறிது பேசுவார் மொழிகள், அவர்கட்குப் புறம்.

—

மனிதனை மனிதன் தாழ்வாக நினைப்பதும் நடத்துவதும் மிகவும் கோரமான காரியம். நமது புண்ணிய பாரத நாட்டு வழக்கமும் அல்ல. கடவுளுக்கும் மகரிஷிகளுக்கும் சம்மதமும் அல்ல.

## சுவாமி ஸ்ரீ சிவானந்தா

சுவாமிகள் அப்பய்ய தீக்ஷிதர் முதலாகப் புகழ் பெற்ற ஞானவித்தகர்கள் பலர் தோன்றிய ஆத்மீக ஒளி பெற்ற ஒரு குலத்திலே அவதரித்தவர்கள். வேதாந்த உண்மைகளை ஓதியுணர்ந்து அவற்றை முறையாக அநுசரிப்பதற்கேற்ற ஒரு வாழ்க்கை முறைக்குத் தம்மை முற்றிலும் அர்ப்பணஞ் செய்து கொள்வதே அவர் தம் இயல்பான நாட்டமாகும்.

எல்லோருக்குஞ் சேவை செய்ய வேண்டும் என்ற இயல்பான ஆவலும் மனித குலம் முழுவதையும் ஒரே குலமாகக் காணும் இயல்பான பொதுமையுணர்வும் அவர்பால் நிரம்பியிருந்தன. வைதிக குலத்திலே தோன்றியவராயினும் சுவாமிகள் என்றும் பரந்த மனப்பான்மையுடையராயும் லோகோபகாரியாகவும் பக்தி சிரத்தையுள்ளவராகவும் திகழ்ந்தார்.

சேவையில் அவருக்கிருந்த பற்றே அவரை வைத்தியத் துறையில் ஈடுபடுத்தியது. உலகில் எவ்வெப் பகுதிகளில் அவர் சேவை தேவையாற்யிரோ, அவ்வப் பகுதிகளுக்கெல்லாம் அவர் கவர்ச்சிமையமாயமைந்தார். மலாயா தேசம் அவரை விரும்பி அழைத்தது. வைத்திய வெளியீடு ஒன்றை ஆரம்பித்து வைத்தியத் தொழிலின் சிக்கலான பிரச்சினைகளைப் பற்றி விரிவான அறிக்கைகள் எழுதி வெளியிட்டு வந்தார்.

உண்மையறிவில்லாக் குறையினாலே சனங்கள் உழல்கின்றார்கள் என்பதை உணர்ந்து பெரும்பாலும் அந்த அறிவுத் தரத்தை உயர்த்தும் பிரசாரங்களையே தமது சமயப் பிரசார இயக்கமாக அமைத்துக் கொண்டார்.

உடல் வைத்தியமும் உளவைத்தியமும் ஒருங்கே கைவந்துள்ள சுவாமிகள் தமது உத்தியோகத்தை உதறித்தள்ளிவிட்டு



மனித உயிர்க்குத் தொண்டு செய்வதற்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்வதற்காகத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். இது இறைவனால் மனிதருக்கு வழங்கப்பட்ட ஆசீர்வாதமும் தெய்வீக சக்தியில் ஒரு பகுதியை மனிதர் மேற்பொழிய விடும் பெருங்கருணையுமாகும்.

சுவாமிகள் 1924ல் இருஷீகேசத்தை உறைவிடமாக்கிக் கடுந்தவமியற்றி - மகாயோகியாக - புண்ணியாத்மாவாக- ஞானியாக - சீவன் முத்தராகத் திகழ்ந்தார். 1932ல் சிவானந்த ஆச்சிரமத்தை ஆரம்பித்தார். 1936ல் தெவ்வீக வாழக்கைச் சங்கம் ஆரம்பமாயிற்று. 1948ல் யோக வேதாந்த வன சர்வகலாசாலை நிறுவப்பட்டது. ஆத்மீக அறிவைப் பிரசாரஞ் செய்வதும், யோக வேதாந்த விஷயங்களில் மனிதர்க்குப் பயிற்சியளிப்பதும் இவற்றின் நோக்கங்களாகும். 1950ல் இந்தியா முழுவதிலும் ஒளிபரப்பும் சுற்றுப்பிரயாணமொன்று நிகழ்த்தினர்.

1953ல் சர்வ சமயப் பாராளுமன்றம் ஒன்றை ஒழுங்கு செய்தார். இருநூற்றுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். உலகம் முழுவதிலும் பெருந்தொகையானோர் இவர் தம சிஷர்களாயினர். இவர் தம் சீஷர்கள் எல்லாச் சாகியங்களையும் சமயங்களையும் கோட்பாடுகளையும் சார்ந்துள்ளவர்கள். அவர்தம் நூல்களை வாசிப்பதென்றால் அது உயர்ந்தோர் அறிவூற்றுக்கண்ணிலே வாய் வைத்துறிஞ்சுதல்போலாகும், அன்றியும் அழிவற்ற நிரந்தர சமாதானத்தையளிக்கும் ஆனந்த வாழ்வில் அற்புத வளர்ச்சி பெறுவதுமாகும்.

# உருத்திரபுர ஈசுவரப்பதிகம்

(வடிவேற் சுவாமிகள்)

## - விருத்தம் -

பெம்மான் பிறை தவழ் செஞ்சடையாய் நம் பிறப்பறுக்கும்
எம்மான் இருநிலத்தே இன்பவாழ்வினை எய்துதற்கு
எம்மாயை நீக்கி இருள்கடிந் தின்துணையாய் இருந்த
அம்மான் உருத்திர நற் பதி தன்னிலமர்ந்தனனே. (1)

தன்னை அளித்தருள் தத்துவன் சற்குருவாகிவந்து
என்பிழை தீர்ப்பது வென்றென் றிரங்கிய என் தனக்கு
முன்வினை யாகிய மூல மலத்தை முடித்திடவே
மன்னினன் ருத்திர நற்பதி தன்னில் மகிழ்வுடனே (2)

சும்மா விருத்தி சுகம்பெற வைத்த சுருதி யொன்றால்
இம்மா நிலத்தி லிருத்தி யெங்கே யொழித்தா யெனவே
அம்மா னடியர்க் கருள்புரிந் தானந்த வாழ்வுதவும்
எம்மா னுருத்திர நற்பதி யெய்தி யிருந்தனனே. (3)

சொல்லா லளப்பரியான் சுடர்சோதி உருவுடையான்
கல்லா வெனக்கின்று கல்லாலிற் காட்டிய காரணத்தை
சொல்லற்றுச் சும்மா விருவெனச் சொல்லிய சுந்தரனை
நல்லோர் பயில் ருத்திரப்பதி நான் சென்று கண்டனனே. (4)

கண்டேன் கருணையெம் கண் நுதலானைக் கழலடைந்து
விண்டேன் பழவினை வீடு பெற் றுய்ந்தனன் விண்ணவர்க்காய்
தொண்டாய்த் தம் கண்டத்துத் தொல்விடமாக்கிய தூயவனை
மண்டாரும் பூம்புனல் மல்கிய ருத்திர நற்புரத்தே. (5)

தானெனை யாண்டநற் சற்குரு தன்னுருவாகி வந்து
ஊன முருக்கி உயர்ஞான மன்றினி லேற்றுவித்தான்,
கானகந் தன்னிற் கழலடி என்தலை காணவைத்தான்
வானவர் வாழ்த்திட ருத்திர நற்பதி வந்தவனே. [6]



சீர்காழி வள்ளல் சிறப்புற சின்மயப்பா லளித்தாய்
நீராரும் வைகையில் ஏட்டினை யிட்டெதிரேற வைத்தாய்
பேரருளாலவர் பேணிய தொண்டுகள் பேணிவைத்தாய்
பார்புகழ்ருத்திர நற்பதி மேவும் பரஞ்சுடரே [7]

வீட்டிற்கு வாயிலெனும் தொடைசாத்துசொல் வேந்தனுக்கு
நாட்டில் நலந்திகழ் நல்லூரில் நன்மலர்ப்பாதம் வைத்தாய்
வீட்டிற் புகுத விரைந் தெழுவோர்க்கு விரைமலர்த்தாள்
காட்டினை ருத்திரநற்பதிதன்னிற் கருணையனே. [8]

ஆருரமர்ந்தனை யாரூரனுக்கன்று தோழனுமாய்
சீரூர்பரவை திருமனை சேர்ந்தனை தூதனென
பேரூர் பிறப் பிறப்பில்லை யுனக்கென்று பேணிவைத்த
காரூரும் சோலைகள் சூழ் ருத்திரபுரிக் கண்ணுதலே. (9)

மண்ணினின் மாணிக்க வாசகம் பாடி மகிழவைத்த
அண்ணலவர்க்கருள் சற்குருவாகிய ஆண்டவனே.
கண்ணிலி யாகும் கடையேனைக் கைவிடல் நீதியன்றென்று
எண்ணி யுருத்திர நற்பதி யெய்தினை யெம்மிறையே. (10)

வாழவழியருளாயென்று வந்து வழுத்தி நின்றார்.
கோளங்கறுத்துக்குடியேற்றி வைத்த குணக்குன்றமே
ஆழுந்திறமுடை யன்புடைச் சோழர் அடி மலர்க்கீழ்
ஊழியம் செய்ய உகந்தா யுருத்திர நற்பதியே (11)



தன்னுடம்பு தான் என்று எண்ணாத போதும் தனக்கென்று எண்ணாத சமயத்திலும் சாத்வீக சாந்தம் உதயமாகும்.

## - சான்ருேர் -

தமக்கு நல்லது என்று கருதாததைப் பிறர்க்குச் செய்யா திருப்பவரே அறவோர் ஆவர். —ஜாரதுஷ்டிரர்—

சான்ருேரிடம் சினம்தோன்றுமாயின் அவர்சால்பு அழிந்து போகும். மனிதன் அடையும் முதல்சால்பு நல்ல எண்ணங் களை எண்ணுதல். இரண்டாவது சால்பு நல்லசொற்களைச் சொல்லுதல். மூன்ருவது சால்பு நல்ல செயல்களைச்செய்தல்.

—எபிரேயமதம்—

கடவுளை நம்பி அறநெறி நிற்பவர் அனைவரும் சான்ருே ராவர். **சான்ருேர் யார்?** ஆண்டவனுக்கு அஞ்சி அறநெ றியினின்றும் வழுவா திருப்பவரே. — **இஸ்லாமியமதம்**—

*அருமறை தெரிந்து நீதிநெறி முறைநடந்து*
*தீனிவ் வகில தலமெங்கு மீறவே*
*ஒருகவிகை கொண்டு மாறுபடுமவரை வென்று*
*நாளும் உறுபுகழ் சிறந்த வாழ்வுளோர்*
*திருவொளியெனும் ஹபீபுநபி முகம்மதன்று*
*வானோர் சிரமிசை நடந்து சோர்வுரு*
*இருசரண நம்பினோர்கள் வரிசைகணிறைந்த*
*பேர்களெவரினும் உயர்ந்த பேர்களே.*

—உமறுப்புலவர்—

தோணியில் ஏறிக்கொள். வாழ்வாகியகடல் ஆழமா னது. கடக்கக் கஷ்டமானது. சான்ருேருடன் உறைவதே கரையேற்றும் தோணி. சான்ருேர் உறவு கிடைத்தால் பகை வரும் நண்பராகி விடுவர். சான்ருேர்க்குச் சேவை செய்ப வன் கடவுளாகவே ஆகிவிடுகிருன். —சீக்கியமதம்—

சால்புக்கு லட்சணம் யாதெனில் ஒருவன் இதுவரை தவறு செய்தபோதிலும் இனிமேல் செய்வதில்லை என்றுகூறி இதுவரை செய்ததற்குத் தக்க பரிகாரம் செய்ய முயல்வாஞ யின், அவனைப்பாராட்டுவதும் அவனுக்கு வந்தனம் அளிப் பதுமேயன்றி முன்னல் செய்த தவறுகளைக்கூறிப் புண்படுத் துவதன்று. —காந்தி—


## வாய்வு சூரணம்

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு,
மலபந்தம், அஜீரணம், கைகால் அசதி,
பிடிப்பு, பசியின்மை, வயிற்றுவலி, பித்தசூலை
பித்தமயக்கம், புளியேப்பம், நெஞ்சுக்
கரிப்பு முதலிய வாய்வுரோ
கங்களை நீக்கி ஜீரண
சக்திக்கும் தேகாரோ
க்கியத்திற்கும் மிகச்சிறந்தசூரணம்

### உபயோகிக்கும் முறை.

இந்தச் சூரணத்தில், ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீரும் அருந்தவும். காலை, மாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால் வெண்ணெய், நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம் மூலிகையினுல் தயாரிக்கப்பெற்றது. தபாற்செலவு உட்பட டின் ஒன்று ரூ. 3-75

[பத்தியமில்லை]

**சம்பு இண்டஸ்ரீஸ் - சேலம் 2. எஸ். ஐ.**

இலங்கையில் கிடைக்குமிடம்.

**ஆத்மஜோதி நிலையம்**

**நாவலப்பிட்டி - இலங்கை.**

Registered at the G. P. o as a News Paper, M. L. 59/300


## இந்தியாவிலுள்ள சந்தா நேயர்களுக்கு

...*...

இந்தியாவிலிருந்து சிலோனுக்குப் பணம் அனுப்புவதில் சில தடைகள் இருப்பதால் இந்தியாவிலுள்ள சந்தா நேயர்கள் யாவரும் பின்வரும் விலாசத்திற்கு தமது சந்தாப்பணத்தை அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பணம் அனுப்பவேண்டிய விலாசம்:

**R. Veerasambu**
SAMBU INDUSTRIES
**SALEM 2.**

மேற்படி விலாசத்திற்கு பணம் அனுப்பியவுடன் இவ்விடமும் ஒரு தபால் அட்டை மூலம் அறியத்தர வேண்டுகின்றோம். அங்ஙனம் அறியத் தந்தவுடன் இங்கிருந்து நேராக ரசீது அனுப்பப்படும்.

**ஆத்மஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி - (சிலோன்)

## — சக்தி அன் கோ —

**35, கொத்மலை வீதி : நாவலப்பிட்டி**

**நமது சமய விளக்கம் என்னும் புத்தகம்**

(யோகி சுத்தானந்த பாரதியாரால் எழுதப் பெற்றது.

50சதம் பெறுமதியான புத்தகம்

**25 சதமாகக் கொடுக்கின்றோம்.**

தபாற் செலவு உட்பட 30 சதமாகும். வேண்டுவோர் 30சத முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.


Printed by N. Muthiah at the Sri Murugan Printers - Punduloya and Published by N. Muthiah, Athmajothi Niliyam, Nawalapitiya Hony. Editor K. Ramachandra, Athmajothi Niliam, Nawalapitiya